

தாய்ப்பாலின் சிறப்பு
தாய்மையின் பூரிப்பு.

தாய்மையின் இயற்கைச் செல்வத்தை
உங்கள் குழந்தைக்கு வழங்குங்கள்.

கல்விசார் பொருட்கள் தயாரிப்பலகு
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவபீடம்,
யாழ்பல்கலைக்கழகம்.

# தாய்ப்பாலூட்டும் போது கவனிக்க வேண்டியவை.

1. குழந்தை பிறந்து 30 நிமிடங்களுக்குள் பாலூட்டுங்கள்.

2. கடும்புப் பால் ஊட்டச்சத்துக்கள், நோய் எதிர்ப்பு சக்தி அதிகமுள்ளது.

3. குழந்தை பிறந்து 3 மாதம் வரை தாய்ப்பால் மட்டுமே ஊட்டுங்கள்

4. குழந்தையின் உறுஞ்சும்தூண்டலே பால் சுரப்பை அதிகரிக்கும்.

5. குழந்தைக்கு இரண்டு வயதுவரை பாலூட்டலாம்.

6. தாய்ப்பால் ஊட்டுவதால் சூல்கொள்ளல் பிற்போடப்படுகிறது.

# இருந்த வண்ணம் பால்கொடுக்கும் முறை.



1. தாய் வசதியாக கதிரையிலோ அல்லது பாயிலோ இருத்தல் வேண்டும்.
2. குழந்தையின் தலை உடம்புடன் நேராக இருக்கும் நிலையில் மார்பகங்களை பார்த்த வண்ணம் அணைத்துப்பிடிக்கவும்



- குழந்தையின் கீழ் உதட்டை முலைக்காம்பினால் வருடவும் (இதை மீண்டும் மீண்டும் செய்யவும்)
- குழந்தை தனது வாயை நன்றாகத்திறக்கும் வரை பொறுத்திருக்கவும் (கொட்டாவி விடும்போது வாயைத் திறப்பது போல்)
- அப்போது குழந்தையை முலைக்குக் கொண்டுவரவும்.
- மார்பகங்களை குழந்தையிடம் கொண்டு செல்லல் ஆகாது.

# படுத்திருந்து பாலூட்டல்



☞ தாய் ஒருபக்கத்தில் படுத்திருத்தல் குழந்தை தாயைப்பார்த்த வண்ணம் ஒருபக்கத்தில் சரித்து படுக்கவைத்தல்

☞ எந்தவொரு தாய்க்கும் உகந்தநிலை குறிப்பாக சிசேரியன் சத்திரசிகிச்சைக்குப்பின் பாலூட்ட உகந்த நிலை.

# குழந்தை தாயின் மார்பகங்களோடு நன்றாக அணைந்துள்ளதற்கான அறிகுறிகள்

☞ குழந்தையின் வாய் நன்றாகத் திறந்திருக்கும்.

☞ குழந்தையின் நாடி தாயின் முலையுடன் முட்டும்.

☞ குழந்தையின் கீழ் உதடு வெளிப்பக்கமாக வளைந்திருக்கும்.

☞ குழந்தை உறுஞ்சி நிற்பாட்டி திரும்பவும் உறுஞ்சும் மெதுவாக ஆழமாக உறுஞ்சும்.

☞ குழந்தை விழுங்கும் சத்தம் தாயினால் உணரப்படும்.

☞ பால் உறுஞ்சிக்குடிக்கும் போது குழந்தையின் கன்னங்கள் உப்பி இருக்கும்.

☞ பால் குடித்ததன் பின்னர் குழந்தை சந்தோசமாகக் காணப்படும்.

☞ தாய்க்கு மார்பகத்தில் வலியிருக்காது.

# தவறாக அணைந்திருப்பின் அதன் அறிகுறிகள்



- ☞ குழந்தையின் வாய் நன்றாகத் திறந்திருக்காது.
- ☞ குழந்தையின் உதடு முன்நோக்கியோ அல்லது கீழ்உதடு உட்புறமாக வளைந்தோ காணப்படும்.
- ☞ முலைக்காம்பு மட்டும் வாயிலிருக்கும் அதைச்சுற்றியிருக்கும் முலைமுகத்தின் (Areola) வின் பெரும்பாகம் வாயினுள் எடுக்கப்படாது.
- ☞ பால் உறுஞ்சிக் குடிக்கும் போது குழந்தை திருப்தியற்றுக் காணப்படும்.
- ☞ பாலூட்டும்போதும் பின்பும் தாய்க்கு முலைக்காம்பில் நோ ஏற்படும்.
- ☞ தாயின் முலைகள் பாலினால் வீங்கியிருக்கும்.
- ☞ முலையிலிருந்து திறமையாகப் பால் அகற்றப்படாமலிருக்கும்.
- ☞ முலைக்காம்பும், முலைமுகமும் (Areola) முழுமையாக குழந்தையின் வாயினுள் அடக்கப்படல் வேண்டும்.

யூனியன் அஷ்யூரன்ஸ்
குழந்தைகள் காப்புறுதி (சிசுமக)
ஆதரவில் வெளியிடப்பட்டது.

ஸ்ரீராம் ஓவ்(f)செற் பிறின்ரேர்ஸ், கந்தர்மடம்.